# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை புகையிரத சேவைகள்

## PROCUREMENT FOR THE SUPPLY OF 5,000 NOS. LESS HIGH CONCRETE SLEEPERS TO WATAWALA YARD AND 5,000 NOS. LESS HIGH CONCRETE SLEEPERS TO HEEL-OYA YARD TO SUIT EN 45 E1 RAILS IN UPPER DISTRICT

**விலைக்கோரல் இல. SRS/F. 8193**

01. கொழும்பு இலங்கை புகையிரத சேவைகள் சார்பில் இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களக் கொள்வனவுக் குழு தவிசாளர் (மேல்நிலை), வட்டவளை முற்றவெளிக்கு 5,000 எண்ணிக்கையான Less High Concrete Sleepers மற்றும் ஹீல் ஓய முற்றவெளிக்கு 5,000 எண்ணிக்கையான Less High Concrete Sleepers to Suit EN 45 E1 Rails வழங்குவதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார்.

02. ஒவ்வொரு அமைவிடத்திற்குமான கொங்கிறீட் சிலிப்பர்கள் மதிப்பீடு செய்யப்படும் என்பதுடன் தனித்தனியாக கையளிக்கப்படும்.

03. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் விலைமனுச் செயற்பாடானது நடாத்தப்படும்.

03. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து 2026-07-22ஆம் திகதி முதல் 2026-08-11ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),
புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை.

| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | 94 (11) 2438078 அல்லது 94 (11) 4600202 |
| தொலைநகல் | : | 94 (11) 2432044 |
| மின்னஞ்சல் | : | srs.slr@gmail.com, tender1.srs@gmail.lk |
| இணையதளம் | : | www.railway.gov.lk |

04. விலைமனுதாரர்கள் விலைப்பட்டியல்களின் நகல் பிரதிகளுடன் கடந்த ஐந்து வருடங்களில் 5,000 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட கொங்கிறீட் சிலிப்பர்களை வழங்கியிருத்தல் வேண்டும் அல்லது 50 மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட பெறுமதியுடைய முன் வலுவேற்றப்பட்ட கொங்கிறீட் தூண்களை வழங்கியிருத்தல் அல்லது 500 மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட பெறுமதியுடைய முன் வலுவேற்றப்பட்ட கொங்கிறீட் கம்பங்களை வழங்கியிருத்தல் வேண்டும்.

05. மீளளிக்கப்படாத கட்டணமாக 45,375.00 ரூபாவை 2026-07-22ஆம் திகதி முதல் 2026-08-11ஆம் திகதி வரை பி.ப. 3.00 மணி வரையில் செலுத்துவதன் பேரில் இலங்கையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

06. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 3,250,000.00 ரூபா பெறுமதியுடைய நிபந்தனையற்ற உத்தரவாதமாக விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

07. விலைமனுக்கள் 2026-08-12ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகம்,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை**

Ref. No. SRS/F.8193

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**